# CHAPTER – 58

# சங்ககால நாணயங்களின் வரலாறு

**ஆ. சரஸ்வதி**
**கௌரவ விரிவுரையாளர்,** முதுகலை வரலாற்று ஆய்வுத் துறை
**திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்.**

## முன்னுரை

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும் பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"

என்று தமிழின் தொன்மையினையும், பெருமையினையும் பறைச்சாற்றுவார் பாவேந்தர். சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கையினை பிரதிபலிக்கும் சங்க இலக்கியம் சிறந்த ஒரு வாழ்வியல் பெட்டகமாகத் திகழ்கிறது. சங்க காலத்தில் தமிழின் தொன்மைக்கும், மேன்மைக்கும் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. அதில் புறச்சான்றுகளாக திகழும் நாணயங்கள் குறித்த சங்ககால வரலாற்றினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

## நாணயத்தின் அமைப்பு

இன்றைய நாணயங்கள் போன்றே அக்கால நாணயங்களிலும் தலை, பூ என்ற இரு பகுதிகள் உள்ளன. இவற்றில் மன்னர்களின் பெயரையோ பட்டப் பெயரையோ மட்டுமே பொறித்துள்ளனர். காலத்தைப் பொறிக்கவில்லை. கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னம் பொறித்த நாணயங்கள் கோவை மாவட்டத்துப் பள்ளலூரில் சவக்குழிகளில் கிடைத்துள்ளன. இதன் தலைப்பகுதியில் யானையின் சின்னம் பொறித்துள்ளனர். காஞ்சிபுரத்தில் கிடைத்துள்ள பல்லவர் கால நாணயங்களின் ஒரு பகுதியில் இரண்டாம் இராசசிம்மனின் பட்டப் பெயரான ஸ்ரீநிதி அல்லது ஸ்ரீபர என்பதும் பல்லவர் முத்திரையான காளைச் சின்னமும் காணப்படுகின்றன. சில நாணயங்களில் ஒன்று அல்லது இரண்டு மீன் சின்னங்கள் பொறித்துள்ளனர். மறு பகுதியில் சக்கரம், பிறைமதி, சைத்திய கோபுரம், குடை, ஆமை முதலியவற்றுள் ஏதேனும் ஒரு சின்னம் இடம் பெறுகின்றது.[1]

## சங்கத்தமிழரின் நாணயங்கள்

நாணயத்தின் மதிப்பு அகமதிப்பு, புற மதிப்பு, தொன்மை மதிப்பு என்று பகுக்கப்படுகிறது. நாணயம் என்பது வணிகப் பொருளாக மட்டுமின்றி, அது வெளிவந்த காலத்தின் நாகரிகம், பொருளாதாரம், கலாசாரம், வரலாற்றுத் தகவல்களை தெரிவிக்கும் ஊடகமாக உள்ளது. வைகை, நொய்யல், தென்பெண்ணை, தாமிரபரணி, பவானி, காவிரி, ஆறுகளின் ஓரம் மண்

அரிப்புக்காரர்களிடமிருந்தும், அமராவதி, ஆந்திரா, சித்தூர், மைசூரு நகரங்களின் பாழடைந்த கோட்டை, கோவில் போன்ற இடங்களில் இருந்தும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காசுகள் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருமே தம் தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தும், புலி, மீன், குதிரை, காளை, சிங்கம் போன்ற விலங்குகள், பறவைகள், மற்றும் சமயம் சார்ந்த உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளனர். களப்பிரர்கள் காசு அவ்வளவாக தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. தமிழகத்தில் தற்போது அதிகம் கிடைக்கும் தொன்மையான நாணயம் ராஜராஜன் காலத்து காசுகள் ஆகும். கி.மு. ஒன்றாம் நூற்றாண்டு வரையிலும் ரோமானிய செம்பு காசுகள் கிடைத்துள்ளது. முகலாய மன்னர் அக்பர் ராமர், சீதை உருவம் பொறித்த நாணயங்களும், ஹைதர் அலி, திப்புசுல்தான் ஆட்சியில், சிவன்–பார்வதி உருவம் பொறித்த நாணயங்களும் வெளிவந்துள்ளன. ஆற்காடு நவாப் ஆட்சியில், அதிக அளவில் சைவ, வைணவ கடவுள்களான சிவன், விஷ்ணு, கணபதி, முருகன், அனுமன் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இது அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிலவிய மத ஒற்றுமைக்கும், சகிப்புத்தன்மைக்கும் சான்றாக உள்ளது.

**வரலாற்று நோக்கில் நாணயங்களின் வரலாறு**

**முத்திரை காசின் வரலாறு**

தமிழகத்தின் முத்திரைக் காசுகள் பெரும்பாலும் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பொருளாதாரத்தையும் வரலாற்றையும் நிறுவப்பயன்படுகிறது. முதலில் இவற்றைப் போன்ற முத்திரைக் காசுகள் வட இந்தியாவில் இருந்து தமிழகம் வந்தவை என்ற கருத்து நிலவியது. ஆனால் மகாலிங்கம் போன்றவர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதலே பாண்டியர்கள் முத்திரைக் காசுகளை வெளியிட்டுள்ளதால், இக்காசுகள் வட இந்தியா வழியே தமிழகத்துக்கு வந்தவை என்ற கருத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதை அடுத்து வட இந்தியா வழி முத்திரைக்காசு என்ற கருதுகோள் மாறத்தொடங்கியது. அதற்கு வலு சேர்க்குமாறு தமிழகத்தில் முத்திரைக் காசுகளை வெளியிட பயன்படுத்திய வார்ப்புக் கூடுகள் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.[3]

**சங்க கால பாண்டியர்களின் நாணயங்கள்**

முதன் முதலாக முத்திரை நாணயங்களை வெளியிட்டவர்கள் பாண்டியர்கள். இதைத் தொடர்ந்து செப்பு நாணயங்களை வெளியிட்டார்கள். இவர்கள் வெளியிட்ட செப்பு நாணயம் சதுர வடிவமானது. முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் குதிரை காணப்படுகிறது. இதன் தலையின் கீழ் ஆமைகள் இரு தொட்டிகளில் உள்ளன. பின்பக்கத்தில் உருவகப்படுத்தப்பட்ட மீன் உள்ளது. தமிழ் பிராமி வரி வடிவத்தில் பெருவழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கும் என்று நம்புகின்றனர். இதில் காணப்படும் ஆமை, வேள்வியோடு தொடர்புடையது. இது பாண்டியர் வேள்வி மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை வெளிப்படுத்துகிறது.[4] பெருவழுதி நாணயம் என்பது சங்ககால பாண்டியர் வெளியிட்ட செப்பு நாணயமாகும். சிலர் பேரரசர்களான மூவேந்தர்களும் குறுநில மன்னர்கள் என்றும், அதனால் அவர்கள் நாணயங்கள் வெளியிடவில்லை என்றும் அவர்கள் மௌரிய பேரரசின் நாணயங்களையே பயன்படுத்தினர் என்றும் கூறி வந்தனர். இதற்கு முன்பு சங்ககால இலக்கிய

கூற்றுகள் கற்பனை என்றே வரலாற்றாசிரியர்களால் நம்பப்பட்டு வந்தது. இந்நாணயம் கிடைத்த பிறகு சங்க காலத்தில் பண்டமாற்று முறையே இருந்ததென்றும் நாணயங்கள் புழக்கத்தில் இல்லை என்றும் நிலவி வந்த கருத்து மாறியது. சங்ககால பாண்டியர்களின் பட்டப்பெயரான பெருவழுதி என்பது இந்நாயணங்களில் பொறிக்கப்பட்டிருப்பதையும் இந்நாணயங்கள் 2300 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்பதைக் கொண்டும் சங்ககாலம் கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே தொடங்கியிருந்ததை அறிய முடிகிறது.

**சங்ககாலச் சோழர் நாணயங்கள் பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையன்,**
**கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில் சூட்டிய வளர்புலிச் சோழர்.**

**பெரியபுராணம்**

அமராவதி ஆற்றுப்படுகையில், சங்ககாலச் சோழர்காசு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. காசின் முன்பக்கத்தில் காளை உருவம் நின்ற நிலையிலும் பின்பக்கத்தில் புலி உருவம் கோடுகளினால் வரையப்பட்டும் இருக்கிறது. இந்நீள்சதுர வடிவச் செப்புக் காசில் காளையின் கீழே நந்திப் பாதச் சின்னங்கள் காணப்படுகின்றன. காசில் உள்ள காளை, அச்சுக் குத்திய வெள்ளி முத்திரைக் காசுகளில் உள்ள காளையைப் போலவே உள்ளதால் இக்காசு வார்ப்பு முறையும், முத்திரை முறையும் கலந்து செய்யப்பட்டுள்ளது. இந்தக் காசின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என ஆறுமுக சீதாராமன் போன்ற தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் வார்ப்பு முறையில் காசைத் தயாரிக்கவும், பயன்படுத்தவும் தமிழர்கள் அறிந்திருக்கின்றனர். இது அவர்களின் மேம்பட்ட வாழ்விற்கு ஒரு சான்றாகத் திகழ்கிறது.[5]

**சங்ககாலச் சேரர் நாணயங்கள்**

சங்ககாலச் சேரர் நாணயங்கள் விற்பொறி பொறித்தனவாயும், சிலக்காசுகளில் மன்னர்களின் பெயரையே பொறித்ததாயும் உள்ளன. அதில் மன்னரின் தலை வடிவம் கீழும் மேற்பரப்பில் தலையைச் சுற்றி அரைவட்ட வடிவில் அவர்கள் பெயர் பொறித்தும் காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை மற்றும் குட்டுவன் கோதை போன்ற சங்ககாலச் சேர மன்னர்களின் காசுகளை உதாரணமாகக் கொள்ளலாம். மேலும் இவர்கள் வெளியிட்ட முத்திரைக் காசுகளும் தமிழகத்தில் கிடைத்துள்ளன.[6]

**குறுநில மன்னன் மலையமானின் காசுகள்**

திருக்கோவலூர் மலையமான் என்பவன் சங்ககால குறுநில மன்னர்களுள் ஒருவன். இவனது வம்சத்தினர் மலையமான் வம்சத்தினர் எனப்பட்டனர். இவர்கள் வெளியிட்ட செப்பு மற்றும் இரும்புக் காசுகள் கிடைத்துள்ளன. அதில் இவர்கள் ஆண்ட திருக்கோவலூர் ஊரின் பொன்னையாறு, மூன்று மலைகள் மற்றும் ஒரு பாதையும் காணப்படுகிறது. இவற்றின் காலம் கி.பி. 100–300 ஆகும்.[7]

**பெருவழுதி நாணயம் (செம்பு)**

மதுரை மாவட்டம் மாங்குளத்திலுள்ள குகைத்தளத்தில் கடலன்வழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று மட்டும் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டைத் தவிர வழுதி பரம்பரையைக் குறிக்க படத்தில் விளக்கப்படும் நாணயம்தான் முக்கியமான சான்று.

இந்த நாணயமே பெருவழுதி மன்னர்களின் கால ஆய்விற்கு அரியதோர் ஊன்றுகோலாக உதவி வருகிறது.[8]

**கொல் இரும்புறையன் நாணயம் (செம்பு)**

ஒரு தோரணவரியல் வாயிலின் நடுவே ஒரு போர் வீரன். வீரன் அணிந்திருக்கும் குல்லா மேலைநாட்டுப் பாணியில் உள்ளது. இரு கைகளையும் இடுப்பில் வைத்திருக்கிறான். சுற்றி விளிம்பில் தமிழ்பிராமி எழுத்து முறையில் கொல்இரும்புறை' என்று பொறிக்கப்பட்டுள்ளது. தோரணவாயில் அருகே வேலியிட்ட மரச்சின்னம்.[9]

நாணயத்தின் அடிப்பகுதியல்; வில்லும் அம்பும் காணப்படுகின்றன. இதன் அருகே இடப்பக்கத்தில் ஆறு வளைவு முகடு உள்ளன. வில்லின் அருகே வலப்பக்கத்தில் ஒரு சதுரத் தொட்டியும் அதில் இரண்டு மீன்களும் உள்ளன. நாணயத்தின் இடப்பக்கத்தின் மேல்பகுதியில் ஓர் ஆற்றின் கரை போன்ற கோடு உள்ளது. ஆற்றில் இணையாக இரண்டிரண்டு மீன்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

**குட்டுவன் கோதை நாணயம் (வெள்ளி)**

வலப்பக்கம் நோக்கிய அரசனின் மார்பளவுத் திருவுருவம். நாணயத்தின் தலைப்பகுதியில் தொன்மையான தமிழ்–பிராமி எழுத்தில் ‘குட்டுவன் கோதை’ என்னும் சொற்றொடர் உள்ளது. இச்சொற்றொடரில் உள்ள ஐந்தாவது எழுத்தான ‘ன்’ தலைகீழாக பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயத்திலும் மன்னன் தலை முழுமையாக மழுக்கிய நிலையில் உள்ளது. அகன்ற கண்ணும், நெடிய மூக்கும், தடித்த உதடும் தெளிவாகத் தெரிகின்றன. கழுத்தில் ஆடை காணப்படுகிறது. எந்தச் சின்னமும் பொறிக்கப்படாமல் வழுவழுப்பாக உள்ளது. இந்த நாணயத்தின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும்.[10]

**தமிழருக்கும் வெளி மாநிலத்தவருக்கும் உள்ள நாணயத் தொடர்பு**

சங்ககாலத் தமிழர்களுக்கும் ஆந்திர மன்னர்களான சாதவாகனர்களுக்கும் நல்ல உறவு இருப்பது அவர்கள் வெளியிட்டகாசுகள் அதிகளவு தமிழகத்தில் கிடைத்திருப்பதைக் கொண்டு நிறுவலாம். வசிட்டிபுத்திர சிரிபுலுமாவி, வசிட்டிபுத்திர சிவ சாதகர்ணி மற்றும் கௌதமி புத்ர சாதகர்ணி போன்ற மன்னர்களின் நாணயங்களே அதிகளவில் உள்ளன. இந்நான்கு மன்னர்களின் நாணயங்களிலும் முன் பக்கத்தில் யானை மற்றும் அம்மன்னனின் தலையும் பின் பக்கத்தில் உச்சயினி குறியீடும் காணப்படும். மன்னனின் தலைப்பகுதியின் ஒரு பக்கம் அவனது பெயர் தமிழிலும் மற்றொரு பக்கத்தில் பிராகிருதத்திலும் காணப்படும். இவற்றில் காணப்படும் தமிழ் எழுத்துகள் மாங்குளம் கல்வெட்டுகள் உள்ள தமிழ் போல் காணப்படுகிறது.[11] சாதவர்கள் காசுகள் செய்ய பயன்படுத்திய ஐந்து வார்ப்புக்கூடுகள் தமிழகத்தில் செய்த காஞ்சிபுரம் அகழாய்வில் கிடைத்துள்ளன.[12]

**அயல் நாட்டுத் தொடர்புகள்**

அரிக்கமேட்டில் கிடைத்துள்ள உரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்து நாணயங்களும் அவரையடுத்து வந்த மன்னர் காலத்து நாணயங்களும் சங்க இலக்கியத்தில் சுட்டியபடி அயல் நாடுகளுடன் தமிழகத்திற்கு இருந்து வந்த வணிகத் தொடர்புகளை நிலை நாட்டுகின்றன.

கர்நாடக மாநிலத்தில் சந்திரவல்லியில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய சீன நாணயம் ஒன்று சீனர்களோடு தமிழகத்துக்கு இருந்த தொடர்பினை விளக்குகிறது.

**கிரேக்க காசுகள்**

தமிழகத்தில் கிடைத்த கிரேக்கக் காசுகளின் பழமை கி.மு. 300 வரை செல்லும். மேலும், கிடைத்துள்ள காசுகள் பல எந்த நகரத்தில் அச்சிட்டது என்பதைக் கூட அறிய முடிகிறது.[13] கரூர் நகரிலே அதிகக் காசுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இக்காசுகளைக் கொண்டு கிரேக்கத் தீவுகளான ரோட்சு, கிறீட்சு, திரேசு, தெசிசு போன்றவற்றுக்கும் தமிழகத்துக்கம் இருந்த வணிகத்தொடர்புகளையும் கிரேக்க நாகரிக கடவுளர்களையும் அறிய முடிகிறது. மேலும், கிரேக்க மன்னர் அலெக்சாண்டர் மரணத்துக்குப்பின் டைகிரிசு நதியில் ஆதிக்கம் செலுத்திய செலியூசிட் வம்சத்தவர் வெளியிட்டபட்டது காசுகள் கரூர் நகர அமராவதி ஆற்றங்களைரயில் கிடைத்துள்ளன.[14] இவற்றைக் கொண்டு கரூர் நகரை மையமாக கொண்ட வர்த்தகத்தில் கரூரிலிருந்து சேரர் துறைமுகம் முசிறிக்கு பொருட்கள் கொண்டு சென்று பின் மெசொப்பொட்தேமியா நகரங்களுக்கு எடுத்துச் சென்றனர் என்ற கருதுகோளை உறுதிப்படுத்தினர்.

**உரோமானியக் காசுகள்**

'உரோமானிய வெள்ளிக் காசு ஒன்று கொங்கு நாட்டிலுள்ள திருப்பூரில் கிடைத்துள்ளது. இத்தகைய தொடர்பால், கருத்துப் பரிமாற்றங்களும், பண்ட மாற்றங்களும், பண்பாட்டுத் தாக்கங்களும் நிகழ்ந்துள்ளமையை அறிய முடிகிறது. ரோமானிய நாணயங்களை ஆராய்ந்தோர் இதற்குச் சமமான நாணயங்கள் வேறெங்கும் கிடைக்கப்பெறாததால் இவை வெறும் காசுகளாக மட்டும் பயன்படாமல் திரவியங்களாகவும் பெரும் மதிப்புமிக்க பொருட்களாகவும் பயன்பட்டன எனக் கருதுகின்றனர்.[15] இதனாலேயே பெருமளவு நாணயங்கள் குவியல்களாக புதைக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் உரோம நாட்டுடன் வாணிபத் தொடர்பு இருந்திருக்கிறது. இதற்குத் தமிழகத்தில் கிடைத்த உரோமனியக் காசுகள் சான்று பகர்கின்றன. சேரநாட்டின் மிளகு, பாண்டிய நாட்டின் முத்து, சோழநாட்டின் துணிவகைகள் உரோமநாட்டு மக்களை மிகவும் கவர்ந்தன. உரோமானியர்கள், பொன், வெள்ளி ஆகியவற்றால் செய்த காசுகளைக் கொடுத்து தமிழ்நாட்டிலுள்ள மேற்குறிப்பிட்ட பொருட்களை வாங்கியுள்ளனர். இதற்குச் சான்றாகப் பல உரோமனியக் காசுகள் தமிழகத்தில் கிடைத்துள்ளன.

**சீன நாணயங்கள்**

பண்டைய தமிழகமும் சீனாவும் கொண்டிருந்த வாணிபத் தொடர்பின் எச்சங்களாகத் தமிழகத்தில் கிடைத்த சீன நாணயங்கள் விளங்குகின்றன. சீன தேசத்து இலக்கியங்கள் கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தோடு நிலவிய வாணிப உறவுகள் பற்றிக் குறிக்கின்றன. கி.மு. 2ஆம் நூற்றாண்டின் சீன நாணயம் தஞ்சாவூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் பட்டுக்கோட்டை வட்டம் 'ஒலயக் குன்னம்' என்ற ஊரிலும், மன்னார்குடி வட்டத்திலுள்ள 'தாலிக்கோட்டை' என்ற கிராமத்திலும் அதிக சீன நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் சீனத்திற்கும் பண்டைய தமிழகத்திற்கும் இடையே பெரும் வாணிபத் தொடர்பு இருந்து வந்தது தெரியவருகிறது.[16] சீனத்துடன் தமிழகம் மேற்கொண்டிருந்த வாணிபத்தொடர்பு மிகவும் பழைமையானதாகும்.

இத்தொடர்பு கி.மு. 1000 ஆண்டளவில் தொடங்கியிருக்கலாம் என்பர். தமிழகத்துப் பண்டங்கள் கி.மு. 7ஆம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன.

### தென்கிழக்கு ஆசிய நாடுகள்

பண்டைய தமிழர்கள் மேலை நாட்டாருடன் மட்டும் கடல் வாணிபம் கொண்டிருக்கவில்லை. கீழை நாடுகளான சீனம், மலேசியா, ஜாவா, வடபோர்னியா போன்ற நாடுகளுடனும் கடல் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். தாய்லாந்திலும்[17], சீனாவிலும்[18] சோழக்காசுகள் கிடைத்ததைக் கொண்டு கிழக்காசிய நாடுகளுடனான சோழர் தொடர்பும் உறுதிப்பட்டுள்ளது. வரலாற்றாளர்கள் அதே போல் தமிழகத்தில் கிடைத்த பினிசிய மன்னர்களின் காசுகளைக்[19] கொண்டும், சசானிய மன்னர்களின் காசுகளைக்[20] கொண்டும் அந்தந்த நாடுகளுடனான தமிழகத்தின் தொடர்பையும் அறிய முடிந்தது.

### முடிவுரை

தமிழக வரலாற்றைக் கணிப்பதற்கும் நிறுவுவதற்கும் கல்வெட்டியல் துறைக்கு அடுத்து நாணயவியல் துறையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. சங்க காலம் தொட்டு வழங்கி வந்த மூவேந்தர் முத்திரைக் காசுகளும், பெருவழுதி நாணயம், செழியன் காசு போன்ற பாண்டியர் மன்னர்களின் காசுகளும் பெரும்பாங்காற்றுவன. மூவேந்தர், குறுநில மன்னர்கள் போன்றோர் வெளியிட்ட நாணயங்கள் மூலம் தமிழக வரலாற்றையும் பொருளாதாரத்தையும், மற்ற மாநில மன்னர்களின் நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்ததைக் கொண்டு இந்தியப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் அறிய முடிகிறது. தமிழகத்தில் கிடைத்த வேற்று நாட்டு மன்னர்களின் நாணயங்களையும் கடலோடிகளின் குறிப்புகளையும் கொண்டு பண்டைய இந்தியாவின் பண்டமாற்று முறைகளையும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் கணிக்க முடிகிறது. மக்களிடையே புழங்கி வந்த நாணயங்கள் வரலாற்றுக் காலத்தை வரையறுக்க உதவும் சான்றுகள் ஆகின்றன.

### மேற்கோள்கள்


1. தமிழர்காசு இயல் நடன காசிநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, முதல் பதிப்பு (1995)
2. op.cit.
3. காசிநாதன், நடன, தமிழர் காசு இயல், உலகத் தமிழாராய்ச்சிநிறுவனம், சென்னை 2003 (முதற்பதிப்பு 1999)
4. சங்க கால பாண்டிய மன்னர் பெருவழுதி நாணயம் கண்டுபிடிப்பு (http://www.thevarthalam.com/thevar/?p=1577/)
5. தமிழ் இணைய பல்கலைக்கழகம் (http://www.tamilvu.org/courses/ degree/c031/ c0311/html/c0311415.htm)
6. பண்டைய தமிழகம், சி.க.சிற்றம்பலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை.

7. பண்டைய தமிழகம், சி.க.சிற்றம்பலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
8. R. KRISHNAMURTHY , Sangam Period Pandya Coins with Tamil Brahmi legends . The Journal of the Numismatic Society of India , 1985. Vol . XL VII , parts I & II , p . 45.
9. டாக்டர் இரா.நாகசாமி, சங்கச் சேரலன் ஈன்ற கவின்மிகு காசு,தினமணி, சென்னை, **15.11.1987.**
10. R. KRISTINAMURTHY , Sangam Period coins found . The Hindu, Madras . 24.5.1994 )
11. A bilingual Coin of a Satavahana , Seminar on Inscriptions ( 1966 ) ,Dr. N. Nagaswamy , page 202
12. Select inscriptions , Vol 1 , pp 224-226 1986 , S.C. Sircar
13. Coins from Greek Inlands in Studies of South Indian Coins , Vol - 5 , 1995 , R. Krishnamurthy , pp - 29-36
14. Selucid coins from karur in studies of south Indian coins , Vol - 3 ,1993 , R. Krishnamurthy . .15. Roman coins from south India , A study based on Distribution and Typology , in studies in south Indian coins , Vol 4 , Krishnamurthy M.S.
15. 13.0 13.1 http://www.tamilvu.org/course/degree/ a031 / a031 1 / html / a0311443 .htm
16. தமிழ்நாடும் தாய்லாந்தும் தொன்மைத் தொடர்புகள், சண்முகம்,ஆவணம் இதழ், சூலை **3** இ **1993**, பக்கம் **81/84**
17. Chinese coins from Tanjore , Si no - Indian studies , Vol . I , part I.Oct. 1944
18. Coins from Phoenicia found at Karur in studies in south Indian coins,Volume 4, 19-27 , Krishnamurthy R. 1994 **20.** Indo - Sassanian Silver coins from Tamilnadu in Studies in South Indian Coins , Shanthi R. Vol 7 pp - 73-75